கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
21-1-1973
30 காசு




ஆஹா!
என்ன இனிமை,
என்ன சுவை!
பல வண்ண
காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்
ஜெம்ஸ்
GEMS
ஆட்டமும்
பாட்டும்
களிப்பூட்டுமே,
காட்பரிஸ்
ஜெம்ஸ்
இனிப்பூட்டுமே!
ரூ. 1
மட்டுமே




கோகுலம்

மலர் 1 :: இதழ் 20

ஜனவரி 21; 1973
பரிதாபி, தை 8

சந்தா விவரம்:
தனிப் பிரதி
விலை 30 காசு
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
வெளிநாடுகள் ரூ. 18-00



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


— பாரதியார்

அட்டைப்படக் குழந்தை :

“ சிங்காரச் சிரிப்பினிலே
சிவானந்தம் காட்டி...!”

வண்ணப்படம் :
வித்யாவ்ரதா





அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!

பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை



இப்போது அழகுகவின அட்டைப் பெட்டியிலே கிடைக்கிறது
சென்னை நகரிலும், திருவனந்தபுரத்திலும், கோழிக்கோட்டிலும் மட்டுமே.

லின்டாஸ்- PS. 24 CP - 140 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரி



ஆத்திசூடி ராஜாஜி



நோய்க்கிடங் கொடேல்

நோய் உண்டாவதற்கு நீயாக இடம் கொடுக்காதே. நோய் தெய்வச் செயலானாலும் நாமாக இடம் கொடுத்துச் சம்பாதித்துக் கொள்ளும் வியாதிகள் பல உண்டு. அகாலத்திலாவது அளவுக்கு மிஞ்சியாவது புசிப்பது, கள், சாராயம் அருந்துவது, இருப்பிடம், துணி, உடல் இவைகளை அசுத்தமாக வைத்துக் கொள்வது, அசுத்த நீரைக் குடிப்பது.

உடலுக்குத் தொழில் கொடுத்துக் கை கால்களைப் போதிய அளவு உபயோகப் படுத்தாமல் தளர்ந்துபோக விடல், நோயாளிகளுக்கு உதவி செய்வதற்கல்லாமல் அவர்களுடன் வீணாகவோ, அறிவீனத்தினாலோ கலந்து வியாதியைச் சம்பாதித்துக் கொள்வது இவை யெல்லாம் நோய்க்கு இடம் கொடுப்பதாகும்.

பழிப்பன பகரேல்

பிறரைப் பழித்துச் சொல்லும் பேச்சுக்கள் பேசாதே. பிறரிடம் நற்குணங்களைக் காணவே முயல வேண்டும். தீமைகளைத் தேடித் தேடி அவைகளைக் குறிப்பிட்டுப் பேசும் வழக்கம் ஆகாது. பிறர் உன்னைப் பழிக்கும்படியாகவும் பேசாதே.

பாம்பொடு பழகேல்

பாம்புடன் பழகினால் கடிக்காத மாதிரியே இருந்து ஒரு நாள் கடித்துவிடும். விஷம் ஏறிச் சாவாய். சில தீய வழக்கங்களை 'அவை என்ன செய்யும்? நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்' என்று நம்பி அவைகளுடன் பழகினால் ஒரு நாள் அவற்றால் மாண்டு போவாய்.


பிழைபடச் சொல்லேல்

பேசும்போது உன் சொற்களில் பொருள் தவறு அல்லது எழுத்துப் பிழை எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும். சொற்களை எழுத்துப் பிழையுடனாவது அல்லது தவறான பொருளிலாவது உபயோகிப்பது கற்றவர்களுக்குத் தகாது. கற்றவர்களும் அப்படிப் பேசுவதால், தாய்மொழியே பழுது அடைந்து கெடுவதற்குக் காரணமாகும்.









பிரலம்பாசுரன் வதம்

சூரிய பகவான் உத்தராயணத்தையடைந்தான். எங்கும் வெப்பம் மிகுந்திருந்தது. சூரியன் மீன ராசியில் சஞ்சரிக்கலானான். ''பங்குனி வெயில் பகைவனுக்கும் ஆகாது'' என்பது பழமொழி. வெய்யிலின் கொடுமையால் மடுக்களும் குளங்களும் நதிகளும் வற்றிவிட்டன. பக்ஷிகுலங்கள் குடிநீர் இன்றி வாடி வருந்தின. மரங்கள் இலைகள் உதிர்ந்து நின்றன.

வசந்த காலம் வந்தது. அப்போது மன்மதன் கரும்பு வில்லுடன் தோன்றித் தன் மலர்க் கணைகளைச் சொரிந்து எல்லாப் பிராணிகளையும் மயங்க வைத்தான். மரங்கள் சிவந்த தளிர் விட்டு விரும்பிப் பூத்துக் குலுங்கிக் கண்டவர் களிப்படையக் காட்சியளித்தன. தென்றல் வீசியது. அதனால் சராசரங்கள் மகிழ்வெய்தின.

வெப்ப மிகுதியால் கடல் நீர் மேக வடிவெடுத்து எங்கும் மழை பொழிந்தது. காட்டாறுகள் ஓடிக் காட்டை வளம் செய்தன. பலராமனும் கண்ணபிரானும், கோபால குமாரர்களுடன் அக்கானிடை ஆடிப் பாடியும் ஓடியும் மகிழ்ந்தனர். கொம்புத் தேனைப் பருகி ஒருவரை யொருவர் பரிகசித்து வம்பு செய்தார்கள்.

கோபாலர்கள் கானகத்தில் மலர்ந்துள்ள நறுமலர்களை யெடுத்து மாலையாகத் தொடுத்து, கண்ணபிரானை அடுத்து, அவருடைய திருமார்பில் மலர் மாலைகளைச் சூட்டிப் பாடினார்கள்.

தருணத்தில் எம்மையாளும்
தனிப் பரம்பொருளே போற்றி!
அருணயர் தளிக்கும்ஞான
அமுதமே! அரசே, போற்றி!
பொருணயர் துரைக்கும் வேதப்
புனித நாயகனே போற்றி!
கருணையங் கடலே போற்றி!
கண்ணனே! போற்றி போற்றி!

என்று மதுர மொழியால் துதி செய்தார்கள்.

அந்த வனத்தில் வாழும் பிரலம்பாசுரன் மிகவும் கொடியவன். மலையையொத்த பெரிய வடிவுடையவன். அவன் இராமரையும் கிருஷ்ணரையும் ஆயர் சிறுர்களையும் வதைத்துத் தின்ன வேண்டும் என்று திட்டம் இட்டான். ஓர் இடைச் சிறுவன் ரூபம் கொண்டு அக்குமாரர்கள் தன்னைத் தமது தோழன் என்று கருதுமாறு அவர்களுடன் கூடி விளையாடினான்.

கண்ணபிரான் அவனைக் கடைக் கண்ணால் பார்த்து, 'கொடிய அரக்கன் கோபால வடிவுடன் வந்து அடுத்துக் கொல்ல வந்தான், இவனைத் தொலைக்க வேண்டும்' என்று திருவுளம் கொண்டார். தமது திருவுளக் குறிப்பை வெளிப்படுத்தாமல் அவனுடன் இன்



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

னுரை கூறி, இன்முகம் காட்டி விளையாடினார்.

தாமோதர மூர்த்தி ஆயர் சிறுவர்களை இரு பிரிவாகப் பிரித்து, ஒரு பிரிவுக்குத் தான் தலைவன் என்றும், மற்றொரு பிரிவுக்கு மாய கோபாலனாய் நிற்கும் பிரலம்பன் தலைவன் என்றும், விளையாட்டில் தோற்றவர்கள் வாகனமாகி வென்றவர்களைச் சுமந்து பசுக்கூட்டத்தை வலம் வர வேண்டும் என்ற நியதியை வகுத்தருளினார்.

இவ்வாறு எல்லாரும் ஆடினர். பிரலம்பன் தோற்றான். அவனை வாகனமாகச் சுமந்து வலம் வருமாறு பலராமர் அவன் தோள் மீது ஏறினார். வஞ்சக அரக்கன் மலையன்ன வடிவுடன் உயர்ந்து விண்ணளவு வளர்ந்தான். பலதேவரைக் கொல்லக் கருதினான்.

பலராமர் அது கண்டு புன்னகை செய்தார். அஞ்சா நெஞ்சுடன் உருத்திர மூர்த்தியைப் போல் கோப நகை புரிந்தார். தமது வலக் கரத்தை ஓங்கி அவன் தலை மீது குட்டினார். அக் குட்டு வஜ்ராயுதம் போலவும், இடியேறு போலவும் வீழ்ந்தது. பிரலம்பாசுரன் தலை பிளந்து, நிலை தளர்ந்து மாண்டான். இதனைக் கண்ட ஆயர்கள் பலராமரைப் பாராட்டிப் புகழ்ந்து துதி செய்தார்கள். புரந்தரன் முதலிய புத்தேளிர் பூமழை பொழிந்தார்கள்.

''பலராமருக்கு இணை யார்? பருவதம் போன்ற இந்தப் பிரலம்பனை, யாரே வதைப்பார்? ஆ! ஆ! அலாயுத மேந்திய அண்ணலே! நீர் எளிதாக இவனை மாய்த்தீர். உமது பொன்னடிக்கு வணக்கம்'' என்று கூறித் துதி செய்தார்கள்.





தேகப்பயிற்சி வாத்தியார்

ராஜாஜி

(உங்களுக்காக, உங்களுக்கே உங்களுக்காக ராஜாஜித் தாத்தா ஏராளமான குட்டிக் கதைகள் எழுதிக் குவித்திருக்கிறார். அந்தச் சிறுசிறுக் கதைகளில் ஒன்றுதான் இது. -ஆர்)

பாலசந்திரனுக்கு வெல்லம் ரொம்ப இஷ்டம். வெல்லம் சேர்த்த பண்டங்கள் கிடைத்தால் விடமாட்டான்.

வைத்தியர்கள் அவன் தேக நிலையைப் பார்த்து, "இவன் உடம்பு கெட்டுப் போய்விட்டது. இவன் சர்க்கரைப் பண்டங்கள் அதிகமாகச் சாப்பிடக் கூடாது" என்றார்கள்.

அவனுக்கோ அந்தப் பத்தியம் முடியவில்லை. எப்படியோ சர்க்கரைப் பண்டங்களைத் தேடிச் சம்பாதித்துச் சாப்பிட்டு விடுவான். அவன் பெற்றோர்களால் இதைத் தடுக்க முடியவில்லை.

"இதற்கு என்ன செய்வது? என் அருமைக் குழந்தையை இழந்துவிடுவேனே!" என்று தாய் அழுதாள்.

தகப்பனுக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. கும்பகோணம் சென்று சங்கராசாரியாரைக் கேட்டான்.

அவர் சொன்னார்: "பையனைக் கொண்டு போய் ஒரு மிட்டாய்க் கடையில் விட்டுவிடு. எவ்வளவு வேணுமோ அவ்வளவு சாப்பிடட்டும்."

இவ்வாறு சொன்னது பையனுடைய தகப்பனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மனைவியிடம் யோசித்தான்.


"எப்படியாயினும் அவர் நமக்குக் குருவாயிற்று. ஆனபடியால் அவர் சொன்னபடியே செய்வோம். நம்ம சிநேகிதர் ராம்லால் இருக்கிறாரே' அவரைக் கேட்டு அவர் கடையில் பையனைச் சேர்த்து விடலாம்!" என்றாள் பையனுடைய தாய்.



பாலசந்திரனை ராம்லாலின் மிட்டாய்க் கடையில் வேலைக்காரனாகச் சேர்த்து விட்டார்கள். ''சம்பளம் கிடையாது. எவ்வளவு வேண்டுமானாலும் மிட்டாய் எடுத்துச் சாப்பிடலாம்'' என்று கடைச் சொந்தக்காரர் சொல்லி விட்டார்.



பாலசந்திரனுக்கு வெகு சந்தோஷம். நான்கு வேளையும் வயிறு நிறையச் சர்க்கரைப் பண்டங்கள் தின்



றான். வேலையில் சேர்ந்த ஐந்தாவது நாள் பையனுக்குப் பேதி எடுத்தது.

அன்ன ஆகாரம் வேண்டியிருக்கவில்லை. மிட்டாயை நினைத்தால் அவனுக்கு வயிறு கிளறும். மூன்று நாட்கள் அவஸ்தைப்பட்டான். பிறகு எப்படியோ நோய் நின்றது. ஆனால் அது முதல் பாலசந்திரனுக்கு வெல்லப் பண்டத்தை நினைத்தால் வாந்தி வரும். முற்றிலும் வெறுத்து நீக்கி விட்டான்.

உடம்பு சரியாகப் போய்விட்டது. ''மிட்டாய்க் கடையில் எனக்கு வேலை வேண்டாம் அப்பா!'' என்று தகப்பனைக் கேட்டுக் கொண்டான்.

பாலசந்திரனை அழைத்துக் கொண்டு பெற்றோர் இருவரும் கும்பகோணம் சென்று ஆசாரியார் முன் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.


''பையனுக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டது. உங்கள் ஆசீர்வாதம்!'' என்றார்கள்.

ஆசாரிய சுவாமிகள் பாலசந்திரனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

இப்போது பாலசந்திரன் மதுரைக் கல்லூரியில் தேகப்பயிற்சி வாத்தியார். கொட்டாப்புளியைப் போல் இருக்கிறான். மாணவர்களும் அவனிடம் பிரியமாக இருக்கிறார்கள். யாரையும் திட்ட மாட்டான். எதையும் அவனே செய்து காண்பிப்பான். □

மூன்று வரங்கள்

வாண்டுமாமா



கிறிஸ்து பிரான் தம் சீடர்களுடன் ஊர் ஊராகச் சென்று உபதேசங்கள் புரிந்து வந்த காலம் அது. ரோமாபுரிக்குச் செல்லும் ராஜபாட்டை. ஆஸ்டியா என்றோர் ஊர். இந்த ஊரிலிருந்து ரோமாபுரிக்குச் செல்லும் வழியில் பாதை ஓரமாக ஓர் எளிய வீடு. அதில் ஓர் ஏழை வசித்து வந்தான். வாழ்வால் ஏழையே தவிரப் பண்பால் உயர்ந்தவன். அவன் பெயர் பெத்ரே உலிவோ. கால்நடையாக அவ்வழி போவோர் யாருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யத் தயங்க மாட்டான் உலிவோ. தங்க இடம் கொடுப்பான். பசியோடு வருபவர்களுக்குத் தன் உணவைப் பகிர்ந்தளித்து மகிழ்வான்.

ஒரு மாரிக் காலத்தில் ஒரு நாள் மதியத்துக்குப் பிறகு உலிவோவின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்த உலிவோ திகைத்துப் போனான். அவன் வீட்டு வாசலில் பதின்மூன்று வழிப்போக்கர்கள் நின்றிருந்தார்கள்! அத்தனை பேரின் முகத்திலும், பசியும் தாகமும் களைப்பும் குடிகொண்டிருப்பதைக் கண்டான் உலிவோ. அதுவோ மாரிக் காலம். குளிர் வேறு. தன்னிடம் இருக்கும் உணவு இத்தனை பேருக்கும் காணாதே என்ற கவலை அவன் மனத்தை வருத்தியது. நாலைந்து துண்டு ரொட்டிகளும் மதுக் குடுவையில் பாதி அளவு சிவப்பு ஒயின் மட்டுமேதான் அவனிடம் இருப்பவை. ஆனாலும் அவன் வாய் என்னவோ, ''வாருங்கள், வாருங்கள். குளிருக்கு இதமாக இருக்கும், இப்படி உள்ளே வாருங்கள்!'' என்று வரவேற்றது. 'முழுப் பசிக்கும் அவர்களுக்கு உணவளிக்கமுடியாவிட்டாலும் குளிரின் கொடுமையிலிருந்து தப்பவும், களைப்புத் தீரவுமாவது உள்ளே வந்து தங்கட்டுமே' என்று எண்ணினான் அந்த நல்லவன். அந்தப் பதின்மூன்று பேரும் பெத்ரே

உலிவோவின் வீட்டுக்குள் வந்தார்கள். அவர்களின் கதகதப்புக்குக் கணப்பைக் கிளறிக் கட்டைகளைப் போடலாம் என்று எண்ணினான் உலிவோ. அந்தோ பரிதாபம்! கணப்புக்கான கட்டைகளும்கூடக் கையிருப்பு இல்லை. அவனுக்கு வேதனையான வேதனை. வந்தவர்கள் வசதியாக உட்காரவாவது செய்யட்டுமே என்று வீட்டிலிருந்த விரிப்புக்களையும் இருக்கைகளையும் தயார் செய்து கொடுத்தான்.

வழிப்போக்கர்கள் நடந்து வந்த களைப்புத் தீர விரிப்புக்களில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் உலிவோவுக்கு அவர்களுடன் இருந்து மகிழ முடியவில்லை. 'விருந்தாளிகளின் பசிக்கு ஏதாவது செய்தாக வேண்டுமே, ஆண்டவனே!' என்ற கவலையோடு அலமாரியைத் திறந்தான். 'ஆ... ஆ... ஆ...!'' உலிவோவுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். தன்னையே நறுக்கென்று கிள்ளிக் கொண்டான்; வலித்தது. அப்படியானால் இது கனவில்லை. அது எப்படி? அலமாரியில் அப்போதுதான் சுட்டுத் தயாரான நிலையில் பதின்மூன்று பெரிய ரொட்டிகள் கமகமவென்று மணம் வீசிக் கொண்டிருந்தன. அவை மட்டுமா? ஒரு பெரிய பாலடைக் கட்டி, ஒரு பாத்திரத்தில் புத்தம் புதிய வெண்ணெய் வேறு. இன்னும்? பதின்மூன்று ஜாடிகள் நிறைய மிக உயர்ந்த மது. ஓர் அரசருக்குரிய அத்தனை சிறப்பான உணவுகள். திகைத்துத் திக்குமுக்காடிப் போன அந்த நல்லவன் விருந்தாளிகளைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போலாயிற்று. சாம்பல் மூடிக் கிடந்தது கணப்பு, அதைக் கிண்டிவிட்டுப் போடக் கட்டைகள் இல்லை. ஆனால் இப்போதோ ? கணப்பிலே நல்ல காய்ந்த விளைந்த பைன் மரக் கட்டைகள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. நாட்டியமாடியபடி சிரிக்கும் தீ ஜுவாலை விருந்தாளிகளின் ஜில்லிட்டுக் கிடந்த கைகளை வரவேற்று இதமளித்துக் கொண்டிருந்தது.

உலிவோ தன் வீட்டில் நிகழ்ந்த இந்த அதிசயத்தினால் திகைத்துப் போயிருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் விருந்தாளிகள் உண்ண மேஜைகளை இழுத்துப் போட்டுத் தயார் செய்தான். அளவளாவியபடி அவர்களுக்கு இனிய உணவு படைத்தான். வந்தவர்கள் உண்டு மகிழ்ந்து விடைபெற்றுக் கிளம்பலானார்கள். ஒவ்வொருவரும் உலிவோவின் கையைக் குலுக்கி நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். கடைசியாக — அவர்தான் எல்லோரிலும் இளையவராகத் தோன்றினார் — விடைபெற்றவர், ''நீங்கள் தலைவரிடம் விரும்புவதைக் கேட்கலாமே? அவர் இந்த உலகில் மட்டுமல்ல. மேலுலகிலும்கூட எதையும் அளிக்கும் வல்லமை பெற்றவர்'' என்றார்.

''அது எப்படி முடியும்? மனிதர்களுக்கு அத்தனை மகத்துவம் எப்படி வரும்?'' என்றான் உலிவோ.

''எங்களை நடத்திச் செல்லும் அவர் தேவகுமாரன். நாங்கள் அவர் சீடர்கள்'' என்றார் அவர். யேசுபிரானும் அவரது பன்னிரண்டு சீடர்களுமே அவர்கள் என்பதை அறிந்த உலிவோ ஓடிச் சென்று அண்ணலின் அடிகளில் விழுந்தான். அவரது ஆடையை எடுத்து முத்தமிட்டு விழி சோர மெய்சிலிர்க்கக் கிடந்தான்.



'' எழுந்திருப்பா, உனக்கு என்ன வேண்டும்? மனமுவந்து அளிக்கிறேன்'' என்றான் யேசுபிரான்.

''என்னுடைய கணப்புக்கு அருகேயுள்ள இருக்கையில் உட்கார்ந்தவர் யாராக இருந்தாலும் நான் விரும்பினாலொழிய அவர்களால் அங்கிருந்து எழுந்திருக்க முடியாதபடி வரம் அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான் உலிவோ.

'' அப்படியே நடக்கும்....'' என்று அருளி மேலே நடந்தார் தேவகுமாரன்.

வரம் கேட்கச் சொன்ன வாலிப சீடர் உலிவோவைப் பார்த்து, ''இதென்ன இப்படி அசட்டுத்தனமான வரம் கேட்டாய்? வேறு உருப்படியாக ஏதாவது கேட்கக் கூடாதா? போ!'' என்று விரட்டினார்.

உலிவோ மறுபடியும் ஓடினான். இன்னொரு வரம் அருளுமாறு வேண்டினான். இயேசுபிரான் இன்முகத்தால் தம் இணக்கத்தைத் தெரிவித்தார். உலிவோ கேட்டான்: ''என் தோட்டத்தில் ஒரு செர்ரி மரம் இருக்கிறது. அதில் ஏறுபவர்களை நான் விரும்பி இறங்கும்படி கூறினாலொழிய அவர்களாக அதிலிருந்து கீழே இறங்க முடியக் கூடாது. அப்படிப் பட்ட வரம் கொடுங்கள்.''

''அப்படியே ஆகட்டும்'' என்று அருளினார் கர்த்தர்.

திரும்பி வந்த உலிவோவை இளஞ் சீடர் வழி மறித்துக் கேட்டார். ''உன் செர்ரி மரத்தில் ஏறுபவர் இறங்க முடியாமல் அங்கேயே உட்கார்ந்திருப்பதனால் யாருக்கு என்ன பயன்? இப்படி முட்டாள்தனமான ஒரு வரத்தைக் கேட்பார்களோ? புத்தி கெட்டவனே! வேறு நல்ல வரமாகக் கேட்டுப் பெறு.



ஆனால் இதுதான் கடைசி வரம். யாரும் மூன்று வரங்களுக்கு மேல் தரமாட்டார்கள்'' என்று எச்சரித்து அனுப்பினார்.

ஆனால் இந்தத் தடவை உலிவோ கேட்ட வரமோ இன்னும் விசித்திரமாக இருந்தது. நான் சீட்டாடும்போது ஒவ்வொரு தடவையும் என் எதிரியை நானே வெற்றி கொள்ள வேண்டும். அப்படி ஒரு திறமையை எனக்கு அளியுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான்.

தேவகுமாரனும், ''உன் விருப்பம் இதுவானால் அப்படியே ஆகட்டும்'' என்று தம் வழி நடக்கலானார்.

சற்றுத் தொலைவு போனதும் சீடர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

''தனக்குச் சொர்க்கப் பதவி கிடைக்க வேண்டுமென்று கேட்டிருக்கலாம். அசடன், கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' என்றார் இளந்துறவி.

''இவன் நீண்ட ஆயுளைக் கேட்டிருக்கலாமே?''

''சுக வாழ்க்கையை, செல்வத்தைக் கேட்கக் கூடாதா?'' — இப்படிச் சிலர்.

''ம்.... ஏதோ அவன் கேட்டுப் பெற்ற மூன்று வரங்களால் அவனுக்குத் துன்பம் ஏதும் ஏற்படாமலிருக்க நாம் பிரார்த்திப்போமாக'' என்றார் ஒருவர்.

வருடங்கள் உருண்டன. உலிவோ பெற்ற வரங்களினால் அவனுக்கு எவ்விதப் பயனுமில்லை. அவன் சீட்டாடுவதே கிடையாது. கணப்புக்கருகே இருந்த நாற்காலியில் எழுந்திருக்காமல் யாரையும் உட்கார வைக்கவோ அல்லது செர்ரி மரத்தில் ஏறியவர்களை இறங்க முடியாமல் செய்ய வேண்டிய அவசியமோ அவனுக்கு ஏற்படவே இல்லை.

ஆனால் இப்போது பெத்ரே உலிவோ வயதான கிழவனாகிவிட்டான். முதுமை மூடிக் கொண்ட நிலையில் ஒரு நாள் தட்டப்பட்ட கதவுக்குப் பதிலளிக்கத் திறந்த போது வாசலில் உயரமான கருமையான ஓர் அந்நியன் நிற்பதைக் கண்டான் உலிவோ. நல்ல வாழ்க்கையே வாழ்ந்து வந்த அவனுக்கு வந்திருப்பது யாரென்று தெரிந்து விட்டது.

''என்னோடு வா....'' என்று அழைத்தான் வந்திருந்தவன்.

''உன்னை எனக்குத் தெரியும். நீதான் சாவு. நீ அழைக்கும்போது நான் வராமல் இருக்க முடியாதுதான். ஆனால் உன்னோடு கிளம்புவதற்கு என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும்வரை நீ தயவுசெய்து அதோ அந்தக் கணப்புக்குப் பக்கத்தில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்திரு'' என்று கேட்டுக் கொண்டான் உலிவோ மரணத்திடம். மரண தேவதையும் அவன் விருப்பப்படி கணப்புக்கு அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உலிவோ, ''மரணதேவனே! நான் உன்னோடு கிளம்பச் சித்தமாகி விட்டேன்'' என்றான். சாவு, இருக்கையிலிருந்து எழப் பார்த்தது; முடியவில்லை. திகைப்படைந்த மரண தேவதை வியப்புடன், ''இதென்னது?'' என்றது.

''அதுவா? அது ஒரு மந்திர நாற்காலி. நான் விரும்பினாலொழிய நீ அங்கிருந்து எழுந்திருக்க முடியாது'' என்றான் உலிவோ.

''நான் கிளம்பியாக வேண்டுமே...? எனக்குக் கடமைகள் இருக்கின்றனவே!''

''ஒரு நிபந்தனையின் மீது உன்னை விடுவிக்கிறேன். நீ இன்னும் முந்நூறு வருஷங்களுக்கு என்னை அழைக்க வரக் கூடாது. சம்மதமா?'' என்று கேட்டான் உலிவோ. மரணத்தினால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. அதன் வேலையைப் பிறர் செய்ய முடியாதே! உலிவோவின் விருப்பப்படி நடப்பதாக வாக்களித்துவிட்டு விடுதலை பெற்றுச் சென்றது சாவு.

முந்நூறு ஆண்டுகள் கழிந்தன. உலிவோவுக்கு அது எவ்வித புதிய அனுபவத்தையும் கொடுக்கவில்லை. மகிழ்ச்சியோடு மரணத்தை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். எதிர்பார்த்த மரணமும் வந்தது.

''இன்னும் ஐந்தே நிமிஷங்கள் தான் இருக்கின்றன. சீக்கிரம் உன்னைத் தயார்ப்படுத்திக் கொள். இம்முறை நீ என்னை ஏமாற்ற முடியாது. நான் உன் வீட்டுக்குள் வரவும் மாட்டேன். எங்கேயும் உட்காரவும் மாட்டேன்'' என்றது.

''நீ உள்ளே வரவும் வேண்டாம். உட்காரவும் வேண்டாம். நீ எனக்காகத் தோட்டத்தில் காத்திருப்பதில் உனக்கு ஆட்சேபணை ஏதுமில்லையே?'' என்று கேட்டான் உலிவோ.

மரணம் சற்று யோசித்தது. அதில் தந்திரம் ஏதும் இருக்காது என்றே தோன்றியது அதற்கு. புல்லும் புதருமாக மண்டிக் கிடந்த தோட்டத்தில் ஒரே ஒரு செர்ரி மரம் மட்டும் செழிப்பாக இருந்தது. மரத்தில் பழங்கள் பளபளத்துத் தொங்கின. 'என்னைச் சாப்பிட வா, வா' என்று அழைப்பது போலிருந்தது.

உலிவோ வீட்டினுள்ளிருந்து குரல் கொடுத்தான். ''உன் விருப்பப்படி செர்ரி பழங்களைச் சுவைத்து மகிழலாம். இன்னும் சில நிமிஷங்களில் நான் இறக்கப் போகிறேன். அந்தப் பழங்களால் எனக்கு எவ்விதப் பயனுமில்லை.''

மரணம் மரத்தின் அருகே சென்றது. பழங்களின் அழகு ஆசையை வளர்த்தது. கைக்கெட்டிய ஒன்றைப் பறித்து உண்டது. 'ஆஹா, என்ன ருசி, என்ன இனிமை? என்ன மணம்!' என்று வியந்தது. பெரிய பழுத்த பழங்கள் உச்சியில் தொங்கின. ஆகவே அவைகளைப் பறிக்க மரணம் மரத்தின் மீது ஏறியது. 'அங்கே....இன்னும் மேலே, அதோ அங்கே!'' என்று மேலே மேலே ஏறி வயிறார உண்டது.

உலிவோவுக்கு அளிக்கப்பட்ட ஐந்து நிமிஷங்கள் முடிந்தும் அது கீழே இறங்கி வரவில்லை; இறங்க முடியவில்லை அதனால்! உலிவோ தான் சித்தமாக இருப்பதாகச் சொன்ன பிறகுதான் சாவுக்குத் தான் மறுபடியும் முட்டாளாக்கப்பட்டது புரிந்தது.

''மரணமே! எனக்கு இன்னொரு முந்நூறு ஆண்டுகள் நீ அளிப்பதானால்தான் நான் உன்னை மரத்திலிருந்து இறக்கி விடுவேன்'' என்று பேரம் பேசினான் உலிவோ. மரணமும் வேறு வழியின்றி அவனுக்கு இன்னொரு முந்நூறு ஆண்டு வாழ்வை அளித்துவிட்டு மரத்திலிருந்து இறங்கிச் சென்றது.

மரணத்திடமிருந்து பெற்ற முந்நூறு ஆண்டு வாழ்வையும் உலிவோ இன்பமாகக் கழித்தான். ஆனால் தான் இப்படியே நீண்டநெடுங்காலம் வாழ்ந்து விட முடியாது என்பது அவனுக்குத் தெரியும். முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு மரணம் மறுபடியும் வந்தது. இந்தத் தடவை தான் ஏமாறவே கூடாது என்ற உறுதியோடு இருந்தது சாவு. உலிவோவும் மரணத்துடன் கிளம்புவதற்குத் தயாராகவே இருந்தான். அறுநூற்று எழுபது ஆண்டுகள் வாழ்ந்த அந்தச் சிறிய வீட்டின் கதவை மூடிக் கொண்டு மரணத்தை நோக்கித் தளர்நடை போட்டான் உலிவோ.

தான் இருமுறைகள் ஏமாற்றப்பட்டாலும் அந்த நல்ல மனிதனிடம் மரணத்துக்கு ஒரு மதிப்பு இருந்தது. ''உலிவோ! கலங்காதே. உனக்குச் சொர்க்கத்தில் ஓர் இடம் இருக்கிறது. அதோ வளைந்து வளைந்து போகிறதே, அந்தப் பாதையில் போ'' என்று வழி காட்டி அனுப்பியது சாவு.

சுவர்க்கத்துக்குப் போக வேண்டுமானால் முதலில் நரகத்தின் தலைவாசல் வழியாகத்தான் போக வேண்டும். நரகத்தின் நுழை வாயிலைச் சாத்தான் காவல் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது. நரகத்தில் சித்திரவதைக்குட்படும் பாபாத்மாக்களின் பரிதாப ஓலத்தை உலிவோவினால் தாங்க முடியவில்லை. அந்த வேதனைக் குரல்களிலிருந்து விடுபட்டு ஓடவே விரும்பினான். ஆனால் அவன் கால்களோ சாத்தானை நோக்கி நடந்தன.

''நான் சுவர்க்கத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நான் மிக்க மகிழ்ச்சியோடு இருக்கிறேன். கடைசியாக ஒரே ஓர் ஆட்டம் சீட்டாட விரும்புகிறேன். என்னுடன் ஆட வருகிறாயா?'' என்று கேட்டான் உலிவோ.

''கட்டாயம் ஆட வருகிறேன்'' என்றது சாத்தான், தன் முட்டை விழிகளை உருட்டியபடி.

இன்னோர் ஆத்மாவைத் தன் ஆளுகைக்கு உட்படுத்தலாமே என்ற ஆசையும்கூட அதற்கு .... ''விளையாட்டுக்குப் பந்தயமாக எதை வைக்கப் போகிறாய்?'' என்று கேட்டது சாத்தான்.

''என்னுடைய ஆத்மாவைத்தான். நான் தோற்றால் நீ என் ஆத்மாவை எடுத்துக் கொள். நீ தோற்றாலோ அந்தக் கதவுக்குப் பின்னால் உள்ள நரகத்திலிருந்து கதறும் பன்னிரண்டு ஆத்மாக்களை நீ என்னுடையதாக்கித் தர வேண்டும்!'' என்று ஒப்பந்தம் பேசினான் உலிவோ.

சாத்தானும் அதற்கு இணங்கியது.

முதல் ஆட்டத்தில் உலிவோ வென்றான். சாத்தானுக்கு ஒரே வியப்பு. சூதாட்டத்தில் தனக்குத் தோல்வியா? இப்படி ஆட்டம் ஆட ஆட சாத்தான் தோற்றுக் கொண்டே இருந்தது.

இனி நரகத்தில் ஆட்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டபோதுதான் ஏமாற்றப்படுகிறோம் என்பதை உணர்ந்தது சாத்தான். ஆத்திரத்துடன் நரகத்தின் கதவுகளை அறைந்து சாத்திக் கொண்டு உள்ளே ஓடியது. சாத்தானிடமிருந்து வெற்றி கொண்ட ஆத்மாக்கள் நீண்ட வரிசையாகப் பின் தொடர பெத்ரோ உலிவோ சுவர்க்கத்தை நோக்கிச் செல்லலானான். சுவர்க்கத்தின் வாசலில் புனித பீட்டர் நின்று கொண்டிருந்தார். ''வருக, வருக....'' என்று இரு கைகளை நீட்டி அவர் வரவேற்றார் உலிவோவை.

''சமீப காலங்களில் சில விநோதமான காரியங்களைச் செய்திருக்கிறாய் நீ. இருந்தாலும் உனக்காக ஓர் இடம் சுவர்க்கத்தில் இருக்கிறது. ஆனால் நீ மட்டுமே வரலாம்'' என்ற பீட்டர் அவன் பின்னால் வரிசையாக நெடுந் தூரத்துக்கு நிற்பவர்களைப் பார்த்து, ''இவர்கள் எங்கிருந்து வந்தார்களோ, அங்கேயே திரும்பிப் போகட்டும். ஏனென்றால் இவர்கள் இங்கு நுழைவதற்கு அருகதையற்றவர்கள்'' என்றார்.


'' ஆனால் இந்த ஆத்மாக்களைப் பிரிந்து என்னால் சுவர்க்கத்துக்கு வர முடியாது. இப்போது இவர்கள் என்னுடையவர்களாகிவிட்டார்கள் '' என்றான் உலிவோ.

பீட்டர் தலையசைத்தார். நீ மட்டுமே இங்கு வர முடியும்'' என்றார்.

குடுகுடு கிழவனான உலிவோ தலை நிமிர்ந்து கேட்டான். ''தேவகுமாரரான யேசுபிரான் என் வீட்டுக் கதவைத் தட்டி அழைத்தபோது நான் அவருடன் வந்திருப்பவர்கள் யார் என்றோ, எத்தனை பேர்களென்றோ கேட்கவில்லை. அவருக்கு நான் காட்டிய அன்பைவிட அதிகமாக இந்த ஏழைக்கு அவர் காட்டக் கடமைப்பட்டவரா இல்லையா என்பதை அவரையே கேளுங்கள்.''

உடனே சுவர்க்கத்தின் கதவுகள் கணகண வென்ற இன்னோசையுடன் அகலத் திறந்தன. உலிவோவும் அவனுடன் வந்த அத்தனை ஆத்மாக்களும் சுவர்க்கத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டார்கள்.

முட்டாள்தனமானவை என்று கருதப்பட்ட மூன்று வரங்களும் பல பாப ஆத்மாக்களுக்குச் சுவர்க்க பதவியைத் தேடித் தந்தன.



"நினைப்போம்; செய்வோம்!"

"பரிதி" ஆர். வெங்கடேசன்

எத்தனை எத்தனை விந்தைகளோ
　இருக்கிற இந்த உலகத்திலே
அத்தனை அத்தனை விந்தைகளை
　அறிந்திட எனக்கும் ஆசைதான்!

மண்ணில் மறைந்த செல்வங்கள்
　மனிதர்க் கிங்கே பயன்தரவும்
விண்ணில் விளையும் விந்தைகள்
　விரிவாய்க் கண்டிட ஆசைதான்!

நிலவில் மனிதர் நடந்ததுநம்
　நினைவில் நிலையாய் நின்றதுபோல்
பலநல் வினைகள் நவநவமாய்ப்
　பார், பார் நானும் செய்கின்றேன்.

கடலின் அலைகள் பலநூறாய்க்
　கரையில் மோதி உடைகிறதே
விடமாட் டேன்,அவை வருநாளில்
　விளை காவழி காண்கின்றேன்!

மன்றில் தவழும் மென்காற்றும்
　மாயப் புயலாய் மாறிடுமுன்
தென்றல் காற்றாய் மாறிடவே
　செய்கின் றேன்ஒரு வழியிங்கே!

நல்லார் உறவும் அறிவியலும்
　நாட்டின் வளமும் சேர்ந்ததனால்
எல்லாம் என்னால் இயலும்தான்,
　எதிர்கா லம்சுக போகந்தான்! (எத்)





"ஓர் எழுத்து"

சிவல்புரி சிங்காரம்


பறக்கும் எழுத்து "ஈ"
　பல்லிளிப் பதுவோ "ஹி"
இரக்கும் எழுத்து "தா"
　எழுதும் எழுத்து "மை"


குறிக்கும் எழுத்து "நீ"
　கூப்பிடும் எழுத்து "வா"
முறைக்கும் எழுத்து "ம்"
　முகரும் எழுத்து "பூ"

அலறும் எழுத்து "ஆ"
　அலட்சிய எழுத்து "ச்சீ"
விழிக்கும் எழுத்து "நீ"
　அணைக்கும் எழுத்து "கை"

மாதம் குறிப்பது "தை"
　வாங்கிக் கொள்வது "பை"
தூது எழுத்து "போ"
　துப்பும் எழுத்து "தூ"

சிரிக்கச் சிரிக்க..!





முதலாளி :
கோழிப் பண்ணையில் வேலைக்கு வந்தால் கோழி முட்டையைத் திருட மாட்டாயே ?

தொழிலாளி :
கேட்டுப்பாருங்க எசமான். நான் முன்னே வேலை பார்த்த கப்பல் கம்பெனியிலே ஒரு கப்பலைக் கூடத் திருடினதில்லீங்க.


- ஏ. சங்கர்

கிட்டு : ஏண்டா ! உன் தம்பிக்கு இவ்வள மெதுவாகக் கடிதம் எழுதறே ?

சீனு : என் தம்பிக்கு வேகமாகப் படிக்கத் தெரியாதே !

- தங்கம்












ஒருவன்: ஏய், மரியாதையாக நடந்துக்கோ, என் தாத்தாவுக்கு நாலு கைகளாக்கும், ஆமா!


மற்றவன்: எப்படிடா ?


அவன்: வலது கை, இடது கை, வழுக்கை, பொக்கை!

- முத்து தனசேகரன்








ஷீலாவைக் காணோம்
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி.
2
டைகர் தனக்குக் கிடைக்காது என்று அறிந்த பிறகு ஷீலாவின் உற்சாகமெல்லாம் வற்றிவிட்டது. தம் அருமை மகளின் மகிழ்ச்சி மறைந்த முகத்தைக் காணக் கங்காராம் சகிப்பாரா?
மிஸ்டர் மாடசாமி! உங்கள் டைகர் விலை மதிக்க முடியாததுதான். இருந்தாலும் என் ஒரே மகளின் மகிழ்ச்சிக்காக நீங்கள்....
கங்காராம் சார்! உங்கள் மகள் உங்களுக்கு எப்படியோ அப்படி என் டைகர் எனக்கு. மன்னிக்கணும்.
கங்காராம் தம் காரை மாடசாமியின் வீட்டுக்கு வெளியே நிறுத்தி இருந்தார். காரில் பிரீஃப்கேஸ் இருந்தது. அதைக் காண்கிறான் ஒரு திருடன்.
சேட்ஜியின் கைப் பெட்டி. அதில் கொழுத்த தொகை இருக்கலாம். இன்று நான் நரிமுகத்தில்தான் விழித்திருக்கிறேன்.
திருடனின் செய்கையை டைகர் கவனிக்கிறது.
அடுத்த வினாடி மைதானத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த பாய்ச்சல் காளையிடம் போய்க் குரைத்துத் திருடனை நோக்கி அதை விரட்டுகிறது.
ஐயோ! இந்தச் சமயத்தில் இது எங்கே வந்தது? ஆளை வேணுமின்னா கரடிப்போட்டும். காளை — மேல வந்திருக்கு! அம்மாடி ஓயாவ்!



திருடன் காரமீது ஏற வேண்டியதாயிற்று.
மிஸ்டர் மாடசாமி! உங்க டைகர் அதிசயப் பிறவிதான். அதோ பாருங்க. என் கைப் பையைக் காப்பாத்தித் திருடனையும் தவிக்க வைத்து விட்டு வந்திருக்கு. இதைப் பிரிய மனம் வராதுதான்.
உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாததற்காக வருத்தப் படுகிறேன்.
டைகர் நினைவாகவே இருப்பாள். ஆகவே நாளையே நாங்கள் பம்பாய் போகிறோம். வருகிறேன்.
யைத் தேடி வந்தான்.
சேட்ஜி அல்லவா தந்தி அடித்திருக்கிறார்? ஷீலா ஆஸ்பத்திரியில்... டைகர் வந்தால்தான் பிழைப்பாளாம். கருணை காட்டுங்கள்...ம்...
ஏண்டா டைகர், உங்கிட்ட அந்தப் பொண்ணு உயிரையே வைத்திருக்காளேடா. உன்னைக் கண்டால்தான் பிழைப்பாளாம். என்னை விட்டுட்டுப் போறியா நீ...ம்... சம்மதந்தானா? ஷீலா கிட்ட உனக்கும் அத்தனை பாசமா? நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன்? ஆனால் பாவம் கந்தாராம். அவர் ஒரே மகள் ஷீலா. அவர் உலகமே அவள்தான்.
மாடசாமியின் மனம் மாறியது. மறுநாளே டைகரை விமானமூலம் பம்பாய்க்கு அனுப்பி வைக்கிறான்.
பம்பாய் விமான நிலையத்தில் இதற்காக ஆள் காத்திருப்பாங்க. பத்திரமாக டைகரை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்.
தொடரும்...

வாழ்க்கை வரலாறு

அம்மைப் பால் கண்டவர்

திருஞானவேணி

அவர் ஒரு டாக்டர் மட்டுமல்ல, இயற்கையை ஆராய்ந்து ஆனந்தப்படும் அன்புள்ளம் கொண்டவரும் கூட. நகர வாழ்க்கையி லிருந்து ஒதுங்கி அமைதியாக வாழவே விரும்பினார் அவர். ஆனால் மனித குலத்தைப் பலி கொண்டு பயங்கர நாசம் விளைவித்துக் கொண்டிருந்தது ஒரு கொடிய வியாதி. அதை வெற்றி கொள்ள முற்பட்டார். அவர் வாழ்க்கையில் மிக முக்கியமான ஆராய்ச்சி அது. ''நான் நினைப்பது சரியானால் இந்தக் கொடிய நோயை இந்நாட்டில் அறவே ஒழித்துக் கட்டுவேன்'' என்ற துணிவுடன் கையில் ரண சிகிச்சைக்குப் பயன்படும் கூரான கத்தியை ஏந்தி வைத்திய உலகில் ஒரு மகத்தான சாகஸ சாதனையை ஆரம்பித்து வைக்கத் தயாராக இருந்தார் அந்த டாக்டர். அவர் அருகிலே ஒரு பால்காரி நின்று கொண்டிருந்தாள். அவருடைய ஆராய்ச்சிக்கு அவள் உதவுவதாக வாக்களித்திருந்தாள். இந்த டாக்டரின் முன்னால் ஆராய்ச்சிக்கு உரிய நோயாளியாக எட்டு வயதுப் பையன் உட்கார்ந்திருந்தான். புதிய மருந்துகளையும் கண்டுபிடிப்புக்களையும் விஞ்ஞானிகள் வெள்ளெலி, குரங்கு ஆகியவைகளிடம்தான் சோதித்துப் பார்ப்பார்கள். ஆனால் இவர் ரொம்பத் துணிச்சல்காரர். தம் ஆராய்ச்சியை நல்ல ஆரோக்கியமுள்ள ஒரு பையனின் உடலிலேயே பரிசோதித்துப் பார்க்க முடிவு செய்திருந்தார். வெள்ளெலியாக உட்கார்ந்திருந்தான் அந்தப் பையன்!

தன்னுடைய இந்த ஆராய்ச்சி தவறானால் அந்தப் பையன் இறந்து போகலாம். ஆனால் தம்முடைய முடிவு தோல்வி யடையாது என்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் அவர். அவருடைய இந்த ஆராய்ச்சி வெற்றி பெறுமானால் ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கில் உயிர்ப் பலி கொள்ளும் ஒரு பயங்கர நோயை ஒழித்துக் கட்டிவிட முடியும்.

மருத்துவ உலகில் இந்த நாடகத்துக்கு நிலைக்களனாக இருந்த இடம் இங்கிலாந்தின் க்ளோசெஸ்டர்ஷயரிலுள்ள பெர்க்லே என்ற அமைதியான கிராமம். காலம் 1796ம் ஆண்டு. டாக்டரின் பெயர் **எட்வர்டு ஜென்னர்.** 1749ம் ஆண்டு பெர்க்லேயில் பிறந்தவர். தகப்பனார் கிராமத்து மாதா கோயிலின் மத குரு. (விக்கர்) ஜென்னர் வெற்றி கொள்ள விரும்பிய நோய் பெரியம்மை.

இன்று இங்கிலாந்தில் பெரியம்மை நோய் என்பது புத்தகங்களில் உள்ள ஒரு விளக்கம்தான். ஆனால் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே, கொள்ளை நோயான பிளேக்கைப் போல இதற்கும் பயந்து நடுங்கினார்கள் மக்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆண்டுதோறும் ஐரோப்பாவில் ஐந்து லட்சம் பேர் பெரியம்மை நோயால் மாண்டார்கள். ஆசியாவிலோ அதை விட அதிகம். நோய் தாக்கியவர் இறக்காமல் பிழைத்தால், அதன் தழும்புகளால் கோரமான உருவத்தைப் பெற்றார்கள். கண் பார்வை பறி போகும். காது செவிடாகும். பெரியம்மை விளைவிக்கும் கோரம் நமக்கெல்லாம் தெரியுமே? பொள்ளல் விழுந்த முகத்துடன் வாழுவதை யார்தான் சகிப்பார்கள்? பெரியம்மை நோய் வந்தால் அதற்கு மருந்து எதுவும் கிடையாது. ஆனால் ஒரு தடவை இந்த நோய் தாக்கியவரை மறுபடியும் இது அணுகுவதில்லை என்ற உண்மையை மக்கள் அறிந்திருந்தார்கள். மிக விரைவில் பிறருக்கும் தொத்திக் கொள்ளக் கூடியது இந்த நோய். நோயுற்றவனின் உடலையோ அவன் பயன்படுத்திய துணிகளையோ தொட்டாலே போதும். வியாதி அவர்களுக்கும் பரவிவிடும். பெரியம்மை நோயிலிருந்து தடுத்துக் கொள்ளுவதற்காக நோயுற்றவர்களிடம் ஆரோக்கியமாக உள்ளவர்கள் வலியச் சென்று நோயைப் பெற்றுக் கொள்ளுவது வழக்கமாக இருந்தது. வைத்தியர்களும் இதற்கு அந்தக் காலத்தில் உதவினார்கள். வியாதியை வலுவிலே உடலில் வருவித்துக் கொண்டு பிறகு அது வராமலே செய்து கொள்ளும் முறை பிறந்தது, சீனர்களிடமிருந்துதான். ஆறும் நூற்றாண்டிலேயே இப்பழக்கத்தைக் கையாண்டு வந்தார்கள் அவர்கள். நோயாளியின் உடையைத் தங்கள் குழந்தைகளுக்கு அணிவித்து அந்த நோயை வரவழைத்துக்கொண்டு அதன் தாக்குதலுக்கு ஆட்பட்டுப் பிறகு அந்த நோயே உடலில் வராதபடி செய்து கொண்டனர். இதற்கு **இம்யூனிஸேஷன்** என்று பெயர்.

ஐரோப்பாவில் இம்முறையை **இனாகுலேஷன்** என்று பெயரிட்டார்கள் டாக்டர்கள். பெரியம்மை கண்டவரின் நோய்க் கொப்புளங்களிலிருந்து பாலை எடுத்து அதை ஓர் ஊசியில் தோய்த்து ஆரோக்கியமாக உள்ளவர்களின் உட

யிலே அதனால் கிறி அவருக்கும் இந் நோய் பரவும்படி 'இனாகு லேட்' செய்யும் முறையை இங்கி லாந்தில் அறிமுகப்படுத்தியது ஒரு பெண்மணி. இவர் மிக்க அழகியாக இருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ராஜப் பிரதிநிதி யாகத் துருக்கிக்கு அனுப்பப் பட்ட மாண்டேகு என்பவரின் மனைவி இவர். பெரியம்மையினால் அழகிழந்த இந்த அம்மையார் துருக்கியிலுள்ள டாக்டர்கள், தங்கள் நோயாளிகளுக்கு வீரியம் குறைந்த பெரியம்மை நோயை வலியத் தொத்தச் செய்து அதனால் அந் நோய் வராமல் தடுக் கும் முறையைக் கண்டார். தன்னுடைய ஆறு வயது மக னுக்கு அம்முறையில் 'இன்னாகு லேட்' செய்து குணம் அறிந்த **மேரி வோர்ட்லே** என்ற அந்தப் பெண் இங்கிலாந்துக்கு வந்து அம் முறையைத் தன் நாட்டிலும் புகுத்தினாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது போல் அம் முறை அத்தனை வெற்றிகரமாகச் செயல்படவில்லை.

இம்முறைப்படி இள வயதில் பெரியம்மை நோயைத் தொத்த வைத்துக் கொண்டவர்தான் எட்வர்டு ஜென்னரும். எட்டு வயதுப் பையனாக இருந்தபோது அவருக்கு இந்த அம்மையை இன்னாகுலேட் செய்தார்கள். அவதிப்பட்டார், ஆறுவாரங்கள். படுத்த படுக்கையாகக் கிடந் தார் குழந்தை ஜென்னர். தேறி எழுந்த பின்னும் தெம்பிழந்து வாழலானார் பல ஆண்டுகள். அந்த அநுபவத்தை அவர் மறக் கவே இல்லை. 'நான் பெரியவ னாகி டாக்டருக்குப் பயின்று இந்தக் கொடிய நோயை இல்லா மலே செய்ய ஆராய்ச்சி செய் வேன்' என்று அப்போதே அந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் ஒரு வேகம் படிந்தது.

ஜென்னருக்குப் பதின்மூன்று வயதானபோது பிரிஸ்டலுக்கு அருகிலுள்ள ஸாட்பரி என்ற ஊருக்கு மருத்துவம் பயில அனுப் பப்பட்டார். இங்குதான் பெரி யம்மை நோயை வெற்றி கொள் ளும் வழி வகையை முதலில் அறிந்தார் ஜென்னர். எப்படி? ஓர் இடைச்சியிடமிருந்து.

அந்தக் காலத்தில் பசுக்களிட மிருந்து பால் கறக்க யந்திரங்கள் கிடையாது. இடைச்சியர்தான் நம் நாட்டு முறைப்படி பால் கறப்பார்கள். இவர்களுக்குப் பசுக்களிடமிருந்து ஒருவித நோய் பரவியது. இதற்குப் பசு அம்மை (கௌ பாக்ஸ்) என்று பெயர். பெரியம்மை மாதிரி இது அத்தனை கொடிய நோயல்ல. இதனால் தாக்கப்பட்ட வர்கள் விரைவில் குணம் அடைந்தார்கள். (கௌபாக்ஸ்) பசு அம்மை கண்டவர்களுக்குப் பெரியம்மை வருவதில்லை என்ற நம்பிக்கை கிராம மக்களிடையே பரவலாக இருந்து வந்தது. இதை முதன் முதலில் ஓர் இடைச்சி



யிடமிருந்து அறிந்தார் ஜென்னர். ''எனக்குப் பெரியம்மை வராது. ஏனென்றால் எனக்குப் பசு அம்மை கண்டாகி விட்டது'' என்றாள் அந்தப் பால்காரி.

அந்த இடைச்சியின் வார்த்தைகளை ஜென் னர் மறக்கவே யில்லை. கொஞ்ச நாட்கள் லண்டனில் இருந்துவிட்டுத் தம் கிராமத்துக் குத் திரும்பினார் ஜென்னர். சக வைத்தியத் தோழர்களிடம் கிராம மக்கள் பெரியம்மை யிடமிருந்து தற்காத்துக் கொள்ளப் பசு அம்மைக்கு ஆட்படும் முறை பற்றிக் குறிப்பிட் டார். ஆனால் ஜென்னரின் பேச்சைக் கேட்ட அவர்கள் நகைத்தார்கள். ஜென்னர் தம் நண்ப

ரும் ஆசானுமான லண்டன் டாக்டரான ஹண்டரின் உபதேசத்தைக் கடைப்பிடித்தார். அது என்ன? ''யோசிக்காதே, செய்து முடி'' என்பதே அந்தப் பொன்மொழி.

ஜென்னருக்கு நாற்பத்தாறு வயது. தமது தத்துவத்தைப் பரிசோதித்துப் பார்க்க முடிவு செய்தார். அந்தப் பிராந்தியத்தில் பசு அம்மை பெருவாரியாகப் பரவி யிருந்தது. ஓர் இளம் இடைச்சிக்கும் அந்த நோய் கண்டது. அவள் பெயர் **ஸாரா நெல்ம்ஸ்**. ஜென்னர் தம்முடைய ஆராய்ச்சிக்கு அவளுடைய உதவியை நாடினார். அவளும் அதற்கு இசைந்தாள். எட்டு வயதுப் பையன் ஒருவனின் ஒத்துழைப்பையும் வேண்டினார் ஜென்னர். அவன் பெயர் **ஜேம்ஸ் ஃபிப்ஸ்**.

1796ம் ஆண்டு மே மாதம் 14ந் தேதி. எல்லாம் தயாராக இருந்தன. டாக்டர் ஜென்னர், ஸாரா நெல்ம்ஸ், ஜேம்ஸ் ஃபிப்ஸ் மூவரும் பெர்க்லேயிலுள்ள டாக்டரின் வீட்டுக்குப் பின்புறமிருந்த தோட்டக் குடிலுக்குப் போனார்கள். ஸாரா தன்னுடைய கையை நீட்டினாள். அவள் கையில் உருவாகி யிருந்த பசு அம்மைக் கொப்புளங்களில் ஒன்றை ஜென்னர் தேர்ந்தெடுத்தார். தம்முடைய சுத்தமான கத்தியினால் அந்தக் கொப்புளத்தைக் கிறி அதிலிருந்து நிறமற்ற திரவத்தைத் தம் கத்தியில் சேகரித்துக் கொண்டார். உடனே அருகில் தயாராக இருந்த சிறுவன் ஜேம்ஸ் பக்கம் திரும்பினார். அவன் பயமின்றி ஆவலுடன் ஜென்னரின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தான். விரைவாகவும் லாகவமாகவும் தம்மிடமிருந்த பசு அம்மைப் பால் கொண்ட கத்தியினால் பையனின் கையில் ஓர் அங்குல நீளத்துக்கு இரண்டு கீறல்களை ஏற்படுத்தி அதில் அந்த அம்மை நோய்ப் பாலை அவன் ரத்தத்தோடு கலக்கச் செய்தார். பெரியம்மைத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்ட முதல் சிறுவன் ஜேம்ஸ் ஃபிப்ஸ்தான். இதற்கு **வாக்ஸினேஷன்** என்று பெயர். லத்தீன் மொழியில் 'வாக்கா' என்றால் 'பசு' என்று பொருள். பசுவிடமிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தாதலால் வாக்ஸினேஷன் என்று பெயர் பெற்றது.

ஜென்னர் ஸாராவின் புறங்கையிலும் ஜேம்ஸின் புஜத்திலும் கட்டுப் போட்டு அனுப்பினார். சிறுவன் ஜேம்ஸைத் தம் கண்காணிப்பில் வைத்திருந்தார். மூன்றாவது நாள் ஜேம்ஸின் கைகளில் சிவப்புப் புள்ளிகள் தோன்றின. ஏழாவது நாள் அவன் தன் கமுக்கட்டில் வலி இருப்பதாக அறிவித்தான். ஜென்னருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒன்பதாவது நாள் குளிருவதாகவும் தலை வலிப்பதாகவும் கூறினான். அவனுக்கு ஒரு சிறு கொப்புளம் கிளம்பியது. ஆனால் பத்தாவது நாள் அவனுக்கு அவஸ்தை ஏதுமில்லை; எல்லாம் சரியாகி விட்டது.

ஆறு வாரங்களுக்குப் பிறகு ஜென்னர் பெரியம்மை கண்டிருந்த ஒருவரின் கொப்புளத்தி லிருந்து பால் எடுத்து அதைச் சிறுவன் ஜேம்ஸின் உடலில் செலுத்தினார். அவருடைய ஆராய்ச்சியின் மிகக் கடுமையான சோதனைக் கட்டம் இதுதான். சிறுவனிடம் பெரியம்மை நோய்க் குறிகள் தோன்றுவதைக் காணத் தவிப்போடு காத்திருந்தார். ஆனால் சிறுவன் ஜேம்ஸிடம் பெரியம்மை தோன்றவில்லை. ஜென்னருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. தம் முடிவு சரி என்பது உறுதியாகி விட்டது அவருக்கு. அம்மைத் தடுப்பு மருந்து பிறந்தது. பெரியம்மையை விரட்டி வெற்றி கொண்டாகி விட்டது என்று மகிழ்ந்து போனார் ஜென்னர்.

ஜென்னரின் இந்தப் புது முறை விரைவாகப் பரவியது. கிழக்கு ஆங்கிலியாவில் உள்ள ஒரு நகர மக்கள் அத்தனை பேருக்கும் அம்மைத் தடுப்பு மருந்து குத்தப்பட்டது. இங்கிலாந்திலிருந்து வாக்ஸினேஷன் முறை உலகம் முழுவதும் பரவியது. இந்த நல்ல காரியத்தை முதன் முதலில் இரு கரங்கள் நீட்டி வரவேற்றது அமெரிக்காதான். ஜென்னரால் அனுப்பப்பட்ட வாக்ஸினை அமெரிக்க ஜனாதிபதி ஏற்றுக் கொண்டு தம் குடும்பத்தினருக்கு அதைப் போடச் செய்தார். அவரைப் பின்பற்றி ஆயிரக் கணக்கில் அம்மைத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டார்கள்.

ஜென்னர் இந்த முறையைக் காண்பதற்கு முதல் வருஷம் வரை, லண்டனில் சராசரி 2018 பேர் அம்மை நோய்க்குப் பலியாகிக் கொண்டிருந்தார்கள். தடுப்பு ஊசி போட்ட பிறகு மரணம் 622 ஆகக் குறைந்தது.

நெப்போலியன் தம் மகனுக்கு அம்மைத் தடுப்புச் செய்து கொண்டதோடு பிரான்ஸ் தேசத்தில் 25 கிளினிக்குகளையும் நிறுவச் செய்தார். நாகரிகமடைந்த நாடுகளில் எல்லாம் பெரியம்மை நோய் அநேகமாக ஒழிக்கப்பட்டு விட்டது. இங்கிலாந்தில் இப்போது அது பழங்கதையாய்க் கனவாகப் போய் விட்டது. ஒரு பயங்கர நோயை வெற்றிகொண்டதற்காக மனித குலம் டாக்டர் எட்வர்டு ஜென்னருக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. □



லாட்டரி அடிப்பது இங்கே! நீச்சல் அடிப்பது அங்கே!

பிரிட்டனில் மட்டும் வருஷத்தில் 250 குழந்தைகள் நீந்தத் தெரியாததால் நீரில் மூழ்கி இறக்கின்றனர். இவர்களில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 100. நாகரிக வளர்ச்சி கொண்ட பிரிட்டனிலேயே இந்தக் கதையானால் மற்ற நாடுகளில் சொல்லவா வேண்டும்! ஆண்டுதோறும் இப்படிக் குழந்தைகள் நீருக்கு பலியாவதைச் சகியாத ரெக் பிரிக்கெட் என்பவர் குழந்தைகளுக்கு நீந்தக் கற்றுத் தரும் கழகம் ஒன்றை ஏற்படுத்தினார். அகில உலக நீச்சல் பயிற்சியாளர் இவர். ஐம்பது வருஷ நீச்சல் அனுபவம் இவருக்கு. இவரிடம் நீச்சல் பயிலும் மாணவ—மாணவிகளின் வயது என்ன தெரியுமா? ஆறு மாதங்களிலிருந்து ஒன்பது மாதங்கள் வரையிலான குழந்தைகள். ஒரு வயதுக் குழந்தைகளைக்கூட இங்கு அனுமதிப்பதில்லை. அப்பா அம்மாவுடன் வரும் இந்தப் புது மொட்டுக்களின் கமுக்கட்டில் காற்றடிக்கப்பட்ட ரப்பர் வளையங்களை மாட்டி நீரில் மிதக்க விட்டு விடுகிறார்கள். நாம் இப்படிச் செய்வோமா?


நன்றி: லண்டன் பிரஸ் சர்வீஸ்

மேல் நாட்டில் குழந்தை வளர்ப்பில் எவ்வளவு கவனம் செலுத்துகிறார்கள்? எத்தனை வசதிகள்! - இதோ, இக் குழந்தை அணிந்து இருப்பது தங்கச் சங்கிலி அல்ல! முதலுதவிச் சங்கிலி! இந்தச் சங்கிலியில் கோர்க்கப்பட்டுள்ள 'லாக்கெட்'டிற்குள் குழந்தையின் பெயர், வயது, இரத்த பிரிவு, சுகாதார நிலை,

குழந்தைகளுக்கு முதலுதவிச் சங்கிலி!

வரக்கூடிய நோய்கள், அவசியமான ஊசி மருந்துகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். இத்தகவல்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும். ஏதேனும் ஆபத்து ஏற்படும் காலத்தில், டாக்டர் தக்க சிகிச்சை அளிக்க இத்தகவல்கள் உதவி செய்யும். எதிர்மாறான விளைவைத் தரக்கூடிய ஊசி மருந்தை டாக்டர் செலுத்துவதை இது தவிர்க்கும். -- யூ.பி.எஸ்.





அசட்டு ராஜா

ஆர். நடராஜன்

'ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ குல திலக', விஜயமார்த்தாண்ட முறுக்கு மீசை கொண்ட, 'அசட்டு' பூபதி ராஜா வழக்கம் போல் ஏதோ அசட்டுத்தனமான காரியம் செய்துவிட்டு ராணியாரிடம் வசவுகளை வாங்கிக் கொண்டிருந்தார்.

ராணி சீறினாள். ''உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? ஏன் இவ்வளவு அசடாக இருக்கிறீர்கள்? பக்கத்து நாட்டு அரசன் மார்த்தாண்டன் அறிவில் சூரியன், சாமர்த்தியத்தில் சந்திரன் என்று நாடே பேசிக் கொள்கிறதே. உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்று அரசி கோபத்துடன் கத்திவிட்டு 'விர்'ரென்று அந்தப்புரத்துக்குச் சென்று விட்டாள்.

ராஜா யோசிக்க ஆரம்பித்தார். ''ஓகோ, நமக்கு உண்மையிலேயே அறிவு இல்லைதான் போலிருக்கிறது. அதனுலென்ன? பக்கத்து நாட்டு ராஜா மார்த்தாண்டனிடம் கொஞ்சம் அறிவைக் கடனுக வாங்கிக் கொண்டால் போயிற்று.'' இவ்வாறு தீர்மானித்தாரோ இல்லையோ, உடனேயே ஒரு குடத்தை எடுத்து, அதில் கொஞ்சம் அறிவை அடைத்து அனுப்பி வைக்குமாறு, மார்த்தாண்டனுக்கு அன்றே அனுப்பி விட்டார், நம் அசட்டுப் பூபதி ராஜா.

மார்த்தாண்டன் திகைத்து விட்டான். அறிவையாவது குடத்தில் அடைப்பதாவது? அவர் கேட்டபடி அனுப்பி வைக்காவிட்டால் அந்த அசட்டு ராஜா பெரும் படையுடன் சண்டைக்கே வந்தாலும் வந்துவிடுவார். வீணுகப் போர் மூளுவதை மார்த்தாண்டன் விரும்பவில்லை. ஏனெனில், போரின் கொடுமைகளை நன்கு உணர்ந்தவன் அவன். ஆகவே ஒரு முடிவுக்கு வந்தான்.

குடத்துடன் தோட்டத்துக்குச் சென்றான். பூசணிப் பிஞ்சு ஒன்றைக் கொடியோடு எடுத்து ஜாக்கிரதையாகக் குடத்துக்குள் புகுத்தி வைத்து, வெயிலும் காற்றும் நன்கு படும்படி வைத்துவிட்

டான். கொஞ்ச நாட்கள் சென்றதும் பிஞ்சு குடத்துக்குள்ளேயே பெரிய காயாக வளர்ந்து விட்டது. அரசன் அதை அப்படியே கொடியிலிருந்து துண்டித்து எடுத்தான். பிறகு, ''பூபதி ராஜாவுக்கு, மார்த்தாண்ட மன்னன் எழுதிக் கொண்டது. தாங்கள் கேட்ட படி அறிவை அனுப்பியுள்ளேன். குடத்தை உடைக்காமல் அதன் வாய் வழியாகவே பூசணிக்காயை முழுதாக வெளியில் எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டால் அதிலிருந்து அறிவு இறங்கி வந்து உங்கள் மூளையில் ஒட்டிக் கொள்ளும்'' என்று ஓர் ஓலையும் எழுதிக் குடத்தையும் ஓலையையும் அசட்டு ராஜாவுக்கு அனுப்பி வைத்தான்.

''குடத்தை உடைக்காமல் பூசணிக்காயை .முழுசாக எப்படி எடுப்பது? அறிவு பெறுவது இவ்வளவு கஷ்டமான காரியமா? அப்படியானால் அது நமக்கு வேண்டாம்'' என்று எண்ணிய பூபதி ராஜா சாமர்த்தியத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டு அனுப்பினார்.

உடனே மார்த்தாண்டன் சங்கு ஒன்றை எடுத்தான். ஒரு நூலின் முனையில் அரிசி மணி ஒன்றைக் கட்டினான். நூலில் கட்டிய அரிசியையும் கட்டெறும்பு ஒன்றையும் சேர்த்து இரண்டையும் சங்கின் ஒரு முனையில் கொஞ்சம் சர்க்கரையைத் தூவி வைத்தான். சர்க்கரையை மோப்பம் பிடித்த கட்டெறும்பு அரிசி மணியையும் வாயில் கவ்வி இழுத்துக் கொண்டு அந்த முனையிலிருந்து சங்குத் துவாரம் வழியாக இந்த முனைக்கு வந்து சேர்ந்தது. இப்போது அரிசியோடு கட்டப்பட்ட நூலும் அந்த முனையிலிருந்து இந்த முனைக்கு வந்திருக்கும் அல்லவா? மார்த்தாண்டன் அரிசியை நீக்கிவிட்டு இவ்விதமாகச் சங்கினுள் நூல் கோத்தான். பிறகு நூல் கோத்த சங்கையும், வேறொரு நூல் கோக்காத சங்கையும் இரண்டையும் பூபதிக்கு அனுப்பி வைத்து, ''இத்துடன் நூல் கோக்கப்பட்ட சங்கொன்றையும், சாதாரண சங்கொன்றையும் அனுப்பியுள்ளேன். தங்கள் கையாலேயே அந்த இன்னொரு சங்கிலும் நூல் கோத்து இரண்டையும் இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டால் உங்களுக்குச் சாமர்த்தியம் அந்த நிமிடமே வந்துவிடும்'' என்ற பதிலையும் கூடவே அனுப்பினான்.

அசட்டுப் பூபதி அந்த இன்னொரு சங்கைக் கையில் வைத்துக் கொண்டு அதற்குள் இன்னொரு நூலை நுழைக்க முயன்று முயன்று தோற்றுக் கொண்டிருந்தார். கடைசியில், ''சாமர்த்தியத்தை இவ்வளவு கஷ்டப்பட்டுத்



தான் அடைய வேண்டுமா? இது நமக்குச் சரிப்பட்டு வராது'' என்று சொல்லிச் சாமர்த்தியத்தைப் பெறும் திட்டத்தையும் கைவிட்டு விட்டார்.

ஆனால் ராஜா சும்மா இருந்தாலும் ராணி விட்டால்தானே? அவள் மறுபடியும் மறுபடியும் அவனை இடித்துக் காட்ட ஆரம்பித்தாள். 'அந்த மார்த்தாண்டனுக்கு மட்டும் ஏது அவ்வளவு அறிவும் சாமர்த்தியமும்?' என்று கேட்டாள். அசட்டு ராஜாவின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அவரும் பொங்கி எழுந்தார். ''அந்த மார்த்தாண்டனுக்கு நிறைய அறிவு இருக்கிறது என்பதால்தானே அவனுக்கு இவ்வளவு புகழ்? அவனையே ஒழித்துக் கட்டி விடுகிறேன்.....'' என்று தீர்மானித்தவர் உடனே போருக்குத் தயாராகுமாறு மார்த்தாண்டனுக்கு ஆள் அனுப்பினார்.

அசட்டுப் பூபதி ராஜா போருக்கு எழுந்துவிட்டதைக் கண்ட மார்த்தாண்டன் திகைத்தான். அப்பொழுது அவனிடம் இருந்ததோ சிறிய படைதான். அசட்டு ராஜாவிடமோ நான்கு விதப் படைகளும் ஏராளமாக இருந்தன. எனவே, தந்திரத்தால்தான் போரை நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு கெட்டியான நூலை எடுத்து அதை உப்பு கரைந்த நீரில் ஊறப் போட்டு வெயிலில் காய வைத்தான். இவ்வாறு நாலைந்து முறைகள் செய்தான். பிறகு அந்த நூலை ஒரு தூதன் கையில் கொடுத்து அவனிடம் ஏதோ சொல்லி அசட்டு ராஜாவிடம் அனுப்பி வைத்தான்.

அசட்டு மன்னனின் அவையை அடைந்த தூதன், ''அரசே! எங்கள் நாட்டின் மீது படையெடுக்கு முன்னால் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். ஏனெனில் எங்கள் நாட்டுச் சாம்பலுக்குக்கூட நம்ப முடியாத உறுதி உண்டு. வேண்டுமானால் பாருங்கள்'' என்று கூறித் தான் கொண்டு வந்திருந்த நூலின் முனையில் ஒரு மோதிரத்தைக் கட்டித் தொங்க விட்டான். பிறகு அந்த நூலுக்குத் தீ வைத்தான். என்ன ஆச்சரியம்! நூல் முழுதும் எரிந்து சாம்பலான பிறகும்கூட மோதிரம் கீழே அறுந்து விழாமல் சாம்பலிலேயே தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த பூபதி ராஜா திகைத்துப் போய்விட்டார். ''அவன் நாட்டில் உள்ள சாதாரணச் சாம்பலுக்கே இவ்வளவு பலம் இருக்கிறதே! இவனுடன் நாம் சண்டைக்குப் போனால் நிச்சயம் சட்டினியாகி விடுவோம்'' என்று பயந்து சமாதானம் பேச முற்பட்டார். அவருக்குத் தெரியுமா, அது உப்புக் கரைசலில் நனைக்கப்பட்ட நூலென்று?

பிறகு தூதன் அசட்டு ராஜாவைப் பார்த்து, ''தாங்கள் எங்கள் மன்னரிடம் அறிவையும் சாமர்த்தியத்தையும் கடனாக வாங்கியிருந்தீர்களாமே? அதற்கு விலை கேட்கிறார் எங்கள் அரசர்'' என்றான். உடனே பூபதி ராஜா, ''எவ்வளவு தர வேண்டுமாம்?'' என்று கேட்டார்.


''நீங்கள் ஒன்றும் தர வேண்டாம். அதற்குப் பதிலாக ஒரு நல்ல குருவிடம் சென்று கல்வி கற்றுக் கொள்ளச் சொல்கிறார்'' என்று முடித்தான் தூதன். பூபதி ராஜாவும் அவ்வாறே ஒரு குருவை நாடி முறையாகக் கல்வி பயின்றார். அவர் அசட்டுத்தனமும் ஒழிந்தது; ராணியின் வருத்தமும் நீங்கியது.

கண்டுபிடியுங்கள்!

இந்தச் சிறிய மாமரத்தில் எத்தனை காய்கள் என்று அதிசயிக்கிறீர்களா? இந்த மாமரத்தில் காய்கள் மட்டுமல்ல, மாங்காய் திருடர்களும் நிறைந்து இருக்கிறார்கள்! பாவம் தோட்டக்காரன்! மரத்தோடு மரமாகத் தலை மறைந்து நிற்கும் அவர்களைத் தேடி விழித்துக் கொண்டு நிற்கிறான்! நீங்கள்தான் அவர்களைக் கண்டுபிடித்துக் கொடுங்களேன்! மறைந்திருப்பவர்கள் எத்தனை பேர்?

- திருமதி ரமணி ரங்கநாதன்





சைகையிலே ஒரு விளையாட்டு


பொழுது போகவில்லை. புத்தகங்கள் படிக்கும் 'மூடும்' இல்லை. வெளியில் சென்று ஓடியாடி விளையாடவும் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு 'டல்னஸ்.' உட்கார்ந்தபடியே ஏதாவது தமாஷாக விளையாட வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் நமது பழைய விளையாட்டுக்களான, தாயக் கட்டான், பல்லாங்குழி இவைகளில் ஈடுபாடும் கிடையாது. என்ன செய்யலாம்?

விளையாடலாம். என்ன விளையாட்டு? சைகை விளையாட்டு. எப்படி? இப்படித்தான்!

இதை இரண்டு பேர்கள்தான் ஆடலாம். வேகமும் விருவிருப்பும் உண்டு இந்த ஆட்டத்திலே. சத்தமே கிடையாது. அதிகம் பேசவே வேண்டாம். எல்லாம் ஜாடைகள்தான்.

விளையாடப் போகும் இருவரும் தங்கள் கைகளைப் பின்னால் மறைத்துக் கொள்ள வேண்டும். ஒண், டு, த்ரீ சொன்னதும் இருவரும் பின்னால் மறைத்துக் கொண்டிருக்கும் தங்கள் கையை முன்னுக்கு நீட்ட வேண்டும். அந்தக் கைகள் பின் வரும் தோற்றங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டதாக இருக்க வேண்டும்.





- ☐ முஷ்டியாக மடக்கிய கை — இது உறுதியான கல்லைக் குறிக்கும்.
- ☐ விரித்த கை. உள்ளங்கை கீழாக — இது காகிதத்தைக் குறிக்கும்.
- ☐ சுட்டு விரலும் நடு விரலும் மட்டும் நீண்டிருக்க மற்ற விரல்கள் மடங்கிய நிலை இது கத்தரிக்கோலைக் குறிக்கும்.





இனி நீங்கள் ஸ்கோர் கணக்கிட வேண்டியதுதான். அதற்கான விதி முறைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். கல், கத்தரிக்கோலை வெற்றி கொள்ளும். கல்லை வெட்ட முடியுமா கத்தரிக்கோலால்? முனை மழுங்கிப் போகாதா? ஆகவே கல்லும் கத்தரியும் எதிர் எதிரானால் கல்லுக்குத்தான் வெற்றி.

கத்தரிக்கோல் காகிதத்தை வெற்றி கொள்ளும். விளக்கம் தேவையில்லையே? கத்தரி வாயில் காகிதம் துண்டாகி விடாதா? ஆகவே கத்தரியும் காகிதமும் எதிர் எதிரானால் கத்தரிக்குத்தான் வெற்றி.

காகிதம் கல்லை வெற்றி கொள்ளும். எப்படி? காகிதத்தினால் கல்லைச் சுற்றிக் கட்டி விடலாமே? இருவருமே ஒரே மாதிரியான பொருளைக் காட்ட நேர்ந்தால் யாருக்கும் எண்ணிக்கை இல்லை. ஆகவே இந்த விதி முறைகளின்படி வெற்றிக்கு உங்கள் விருப்பப்படி ஸ்கோர்களை ஏற்படுத்திக் கொண்டு விளையாடிப் பாருங்கள். எத்தனை நேரம் வேண்டுமானாலும் விளையாடிக் கொண்டிருக்கலாம். அலுப்பே ஏற்படாது. உற்சாகமாகக் கூட இருக்கும்.— **சுருட்டை**

வலைக்கு மேலே




பெண்கள் டென்னிஸ் ஆட்டத்தில் உடைகளின் முன்னேற்றம்

லான் டென்னிஸ் ஆட்டம் டென்னிஸ் ஆட்டத்தின் வழித் தோன்றல்தான். இங்கிலாந்து பிரான்ஸ் தேசங்களின் அரசாங்க வட்டாரத்தில் ஆதியில் பிரபலமாக விளங்கியது டென்னிஸ் தான். நான்கு பக்கங்களிலும் சுவர் எழுப்பிய கோர்ட்டுகளினுள்ளேதான் டென்னிஸ் ஆட்டத்தை முதன் முதலில் ஆடினார்கள். எட்டாம் ஹென்றி தன் இளமை நாட்களில் மிகவும் விரும்பி ஆடிய ஆட்டம் டென்னிஸ். ஹாம்டன் கோர்ட் அரண்மனையில் இன்றைக்கும் அவர் ஆடிய மைதானம் அப்படியே இருக்கிறது. இன்னொரு பிரபலமான டென்னிஸ் கோர்ட் வெர்ஸயில்ஸில் உள்ளது. 1789ம் ஆண்டு பதினாறும் லூயி மன்னர் ஸ்டேட் ஜெனரல்கள் கூடும் கூடத்தைப் பூட்டி முத்திரை வைத்து விட்டதால் ஸ்டேட் ஜெனரல்கள் வெர்ஸெயில்ஸில் உள்ள டென்னிஸ் மைதானத்தில் கூடி ஒரு முடிவெடுத்தார்கள். ஆகவே இம் மைதானம் சரித்திரப் புகழ் பெற்றது.

லான் டென்னிஸுக்கும் ரியல் டென்னிஸுக்கும் விதிகளில் பல மாற்றங்கள் உண்டு. ஆனால் மைதானத்தின் மையத்தில் உள்ள வலை, ஸ்கோர் எண்ணிக்கை இரண்டிலும் இவற்றிடையே வேறுபாடு கிடையாது. 'லவ்' என்பதற்கு டென்னிஸ் ஆட்டத்தில் ஸ்கோர் கிடையாது என்பது பொருள். இது பிரெஞ்சு மொழியிலிருந்து பிறந்தது. 'டியூஸ்' (Deuce) என்பது இரு கட்சிகளும் சம பலத்தில் இருக்கும்போது வெற்றிக்கு ஒரு கட்சி இரண்டு பாயிண்ட் எடுக்க வேண்டிய நிலையில் பயன்படும் சொல். பிரெஞ்சு மொழியில் இரண்டு என்பதற்கு (Deux) 'டக்ஸ்' என்பார்கள்.

விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பிர



தான ஆட்டம் 'க்ரோகட்' என்பது தான். ஆனால் இளைஞர்கள் உற்சாகமும் விறுவிறுப்பு மிக்க வேறு ஆட்டத்தை விரும்பினார்கள். 1874ம் ஆண்டு மேஜர் விங்பீல்டு என்பவர் ஃபாரிஸ்டிக் (Sphairistike) என்று ஒரு விளையாட்டை அறிமுகப் படுத்தினார். நாழிகை வட்டிலின் வடிவத்தில் இதன் 'கோர்ட்' அமைந்திருந்தது — அதாவது வலையின் அருகே குறுகலாக.

விங்பீல்டு உருவாக்கிய இவ்விளையாட்டின் பெயர் நிலைத்திருக்கவில்லை. இதைச் சுருக்கமாக 'ஸ்டிகி' என்று அழைக்கலானார்கள். ஆனால் அவர் உருவாக்கிய இவ்விளையாட்டு நிலைத்து நிற்கலாயிற்று. 1875ம் ஆண்டுதான் இன்றைய லான் டென்னிஸ் ஆட்டத்துக்கான விதி முறைகள் வகுக்கப்பட்டன. இதே ஆண்டு லண்டனின் தென்மேற்குப் பிராந்தியத்தில் உள்ள விம்பிள்டன் என்னுமிடத்தில் இருந்த அகில இங்கிலாந்து க்ரோகட் கழகம் லான் டென்னிஸ் பகுதியைத் தொடங்க முடிவு செய்தது. இதில் அங்கத்தினர்கள் மிக்க ஆர்வத்துடன் சேரலானார்கள். விரைவில், அகில இங்கிலாந்து க்ரோகட் கழகமாக மட்டும் இருந்த இது லான் டென்னிஸுக்குமான பிரபல கழகமாகியது.

லான் டென்னிஸின் மைதானம் நீண்ட சதுரமானது. 1877ம் ஆண்டு அமெச்சூர் ஆட்டக்காரர்களெல்லாம் கலந்து கொண்ட சாம்பியன்ஷிப்களின் சந்திப்பு நிகழ்ந்தது. இருபத்திரண்டு பேர் கலந்து கொண்டார்கள். லான் டென்னிஸ் இங்கிலாந்துக்கான ஆட்டமாக மட்டும் இருக்கவில்லை. அதன் எளிய விதி முறைகளும், உபகரணங்களும் இதை உலகம் முழுவதும் விரும்பி விளையாடும் பிரபலமான ஆட்டமாகப் புகழ் பெற வைத்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு கோடையிலும் உலகெங்கிலுமிருந்து ஆண்களும் பெண்களும் விம்பிள்டனுக்கு வந்து விளையாடலானார்கள்.

பெண்களுக்கான சாம்பியன்ஷிப் ஆட்டம் 1884ல் நிகழ்ந்தது. ஐந்து பேர்கள்தான் கலந்து கொண்டார்கள். 1914ம் ஆண்டுவரை பெண்கள் பாதம் வரை மூடிய நீண்ட ஆடை அணிந்தே லான் டென்னிஸ் ஆட்டத்தை ஆடினார்கள். இது இவர்களுக்கு சௌகரியக் குறைவாகவும் ஒரு தடையாகவுமிருந்தது. டென்னிஸ் ஆடிய பெண்கள் ஹாட்டும் அணிந்திருந்தார்கள். தோட்ட விருந்துக்குப் பெண்கள் அணிந்துகொண்டு வரும் உடையே டென்னிஸுக்கும் அணிந்து ஆடினார்கள். நாளடைவில் பெண்களின் உடையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. 1919-ம் ஆண்டில் திறந்த கழுத்துக் கொண்ட மேலங்கியும், முழங்காலுக்கு மேல் வெள்ளை ஸ்கர்ட்டும் அணிந்து ஆடலானார்கள். இதன் பிறகு படிப்படியாக உடையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இன்று பெண்கள் சுதந்திரமாகவும் விரைவாகவும் ஓடி ஆட ஏற்றவகையில் ஆடைகளின் உயரம் குறைந்தும்; இறுக்கம் தளர்ந்தும் உள்ளது.

நாடுகளுக்கிடையே போட்டி ஆட்டங்கள், டேவிஸ் கப்புக்காக ஆடுவது ஆரம்பமாயிற்று. இந்தக் கப்பை வழங்கியவர் டுவிட் டேவிஸ் என்ற பிரபல அமெரிக்க ஆட்டக்காரர். 1900-ம் ஆண்டு இக் கோப்பையை ஏற்படுத்தினார். முதல் சில ஆண்டுகள் இக் கோப்பையைப் பெற இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரு தேசங்கள் மட்டுமே போட்டியிட்டு விளையாடின. ஆனால் இன்றைக்கு இக் கோப்பைக்காகப் பல நாட்டு ஆட்டக்காரர்களும் போட்டியிடுகின்றனர். மிகப் புகழ் பெற்ற பிரபலமான லான் டென்னிஸ் ஆட்டக்காரர் ஒரு பிரெஞ்சுப் பெண்மணி. **சூசன் லெங்லன்** என்பது இவர் பெயர். 1919லிருந்து 1925 வரை பெண்களுக்கான சாம்பியன்ஷிப்பை ஆறு முறைகள் விம்பிள்டனில் பெற்று வெற்றிக் கொடி நாட்டியவர் இந்த லெங்லன். இவர் இப்படித் தொடர்ந்து வெற்றி பெற்றதற்குக் காரணம் இவர் ஆண்களோடு ஆடுவார். அவர்களின் வீச்சுக்கும் லாகவத்துக்கும் ஈடு கொடுத்துப் பழகிய காரணத்தினால் பெண்கள் போட்டியில் இவரை எந்தப் பெண்ணாலும் வெற்றி கொள்ள முடியவில்லை. 1925ல் **மரீன் கன்னல்லீ** என்ற பதினேழு வயதான பெண் அமெரிக்க சாம்பியன்ஷிப்பையும் விம்பிள்டன் வெற்றியையும் பெற்றிருக்கிறார்.

ஆண் பெண் இருபாலரும் விரும்பி ஆடும் ஒரு பிரபலமான விளையாட்டு டென்னிஸ் — லான் டென்னிஸ். டென்னிஸில் உலகப் புகழ் பெற்றுத் திகழும் ராம்நாத் கிருஷ்ணன் அவர்களைத்தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே? அவருடைய பிள்ளையும் சிறந்த டென்னிஸ் சாம்பியனாக உருவாகி வருகிறான். டென்னிஸ் ஆட்டம் தேக ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் புத்துணர்வையும் ஏற்படுத்தும் ஒரு விளையாட்டு. நீங்களும் டென்னிஸ் ஆடப் பழகிக் கொண்டு இந்தியாவின் பெருமையை விளையாட்டு உலகில் உயர்த்தலாமே.

—விகேயெம்



சுண்டு குண்டு சீமாத் தாத்தா

சாமா

சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் பெரிய குறை. ''ஊரிலுள்ள தாத்தாக்களெல்லாம் தங்கள் பேரன்களிடம் எத்தனை அன்பாக இருக்கிறார்கள். நாங்கள், சீமாத் தாத்தாவிடம் போய் ஏதாவது கேட்டால், 'சள்' என்று எரிந்து விழுகிறார்'' என்று குறைப்பட்டுக் கொண்டார்கள் பாட்டியிடம். இதைக் கேட்டுக்கொண்டே சீமாத் தாத்தா வந்துவிட்டார். ''என்னடா பசங்களா! என் மீதா புகார்?'' என்றதும் பயல்கள் ஓடிவிட்டார்கள். பாட்டி, பேரன்கள் குறைப்பட்டதைக் கூறினாள், தாத்தாவிடம். தாத்தாவும் பாட்டியும் கொஞ்ச நேரம் ஏதோ ரகசியம் பேசினார்கள்.

தாத்தா சட்டையை மாட்டிக் கொண்டு அங்கவஸ்திரத்தையும் சுற்றிக் கொண்டு, ''பசங்களா, வாங்கடா. கடை வீதி வரையில் போய் வரலாம்'' என்று அழைத்தார். சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் வியப்பான வியப்பு, தாத்தாவே கடை வீதிக்கு அழைக்கிறாரே என்று. அவர்கள் வியப்பு போகப் போக அதிகமாகிக் கொண்டே வந்தது. அவர்கள் கேட்காமலேயே பொம்மைகளை வாங்கிக் கொடுத்தார். பட்சணக் கடையின் அழகையும் வாசனையையும் கண்டு மனத்துக்குள் அவர்கள் ஏங்கும் போதே தாத்தா அவர்களை ஹோட்டலுக்குள் அழைத்துப் போய் கேட்பதற்கு முன்பாகவே ஸ்வீட்டுகளாக வாங்கிக் குவித்தார். வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். தாத்தாவின் செயல் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. காரணம் புரியா விட்டாலும் காரியம் நடந்து கொண்டிருந்ததே!

விளையாட்டுச் சாமான்கள் விற்கும் கடை வந்தது. ''டேய்! தாத்தா நல்ல 'மூடில்' இருக்கிறார் போலிருக்கிறது. கிரிக்கெட் சீஸன் இது. ஒரு செட் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாமா? கிடைக்குமா?'' என்று கிசு கிசுத்துக் கொண்டார்கள்.

''என்னடா மந்திராலோசனை? கிரிக்கெட் செட்டுத்தானே வேணும்? வாங்கினால் போகிறது'' என்று கடைக்குள் நுழைந்ததைக் கண்ட குண்டுவுக்கும் சுண்டுவுக்கும் மூர்ச்சை போடாத குறை!

பட்சண மூட்டை, விளையாட்டுச் சாமான்களுடன் வீட்டுக்கு டாக்சியில் தான் வரும்படி இருந்தது. ஒரே குஷி பசங்களுக்கு. குதூகலத்துடன் உள்ளே ஓடிய இருவரும் தங்கள் பொருள்களை அலமாரியில் வைக்கச் சென்ற போது 'வீல்' என்று கத்தி விட்டார்கள். ஏன்?

''பாட்டி... தாத்தா! எங்கள் உண்டியல் உடைக்கப் பட்டிருக்கிறது. ஐயையோ! எத்தனை வருஷங்களாக ஆசை ஆசையாகச் சேர்த்து வந்தோம். ஒவ்வொன்றிலும் நாற்பது ரூபாய் வரையில் சேர்ந்திருந்ததே. போச்சே!'' என்று கத்தினார்கள். தாத்தா பாட்டிக்குக் கண் ஜாடை காட்டினார். அவள் சொன்னாள்: ''அன்று நாம் வெளியே போய் வந்தபோது ஒரு திருடன் வீட்டிலிருந்து ஓடவில்லையா? நீங்கள் கூடத் திருடனில்லை, கோவிந்தன் என்றீர்களே, அவன்தான் மறுபடியும் வந்து உங்கள் உண்டியலை உடைத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்'' என்றாள்.

''நீங்கள் வேண்டிக் கொண்டபடி மொட்டை அடித்துக் கொண்டீர்களா? இல்லையே? அதற்குத் தண்டனையாகத் தான் கோவிந்தன் இங்கு விஜயம் செய்திருக்கிறார்'' என்று ஒத்துப் பாடினார் சீமாத் தாத்தா.

சுண்டுவும் குண்டுவும் அதை மறுக்கவில்லை. ''இருக்கலாம்... அதுவும் நியாயம்தான்'' என்றார்கள் ஈனக் குரலில்.

தாத்தாவுக்கு மனம் இளகிவிட்டது. தம் பேரக் குழந்தைகளின் கடவுள் நம்பிக்கையைப் பாராட்டும் வகையில் அவர்கள் உண்டியலுக்கு உரிய பணத்தைத் தம் அன்பளிப்பாகச் செலுத்தினார். சுண்டு குண்டுவின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?





பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
ஏய், முனியா! உன்னோட ஆட்டைக் கொஞ்ச நேரத்துக்கு இரவல் தரியா?
உனக்கு இல்லேம்பேனா பாலு? ஆனா நீ உன்னோட போன இதழ் கோகுலத்தை எனக்குப் படிக்கத் தரணும்.
அப்பாடா! இது தான் சொகுசான வாழ்க்கை. முனியனோட ஆட்டுக்கும் வயிறு ரொம்பும். எனக்கும் வேலைப் பளு குறைஞ்சுது. புதுக் கோகுலம் படிக்கலாம் ஹாய்யாக.
யேய்... ஐயோ!
அது அம்மாவோட அருமையான பூந்தொட்டியாச்சே. அட கடவுளே...!
புண்ணியவானே உன்னோட ஆட்டை இழுத்துக்கிட்டுப் போப்பா. நான் இந்த மெழுகைக் கொண்டு உன் ஆடு நாசமாக்கியதை எப்படியாவது சமாளித்தாகணும்.
COLOURED CANDLES
கச்சிதமாகப் போச்சு! இவை மெழுகாலே தயாரான பூக்களுன்னு யாராலும் கண்டு பிடிக்க முடியாது!


சோம்பேறிப் பயலே, தோட்டத்திலே உள்ள புல்லை வெட்டச் சொன்னுக் கதைப் புஸ்தகமா படிச்சிண்டிருக்கே?
வந்து... அதில்லேப்பா. இந்தப் பூக்களோட அழகை ரசிச்சிண்டிருக்கேனுக்கும்.
ம்... காலையிலிருந்ததை விடப் பூக்கள் ரொம்பப் பிரகாசமா இருக்கே...
வேலைக்கு டிமிக்கி கொடுக்கற குணம் மட்டும் எனக்குப் பிடிக்காது. நாங்க இங்கேயே உட்கார்ந்து நீ வேலை செய்வதைப் பார்க்கப் போகிறோம். ம்... நடக்கட்டும்.
பாலுவின் வேலைத் தனத்தை அம்பலமாக்க சூரியன் சதி செய்கிறான்.
ஏய்...ய்... இதென்னது.. மேலேயிருந்து
ஓ! இப்பத்தான் எனக்குப் புரிஞ்சுது. உன்னோட பூக்களை நாசமாக்கிட்டு அதுக்குப் பதிலா மெழுகிலே பொம்மைப் பூக்களைப் பண்ணி இங்கே வச்சிருக்கான் பயல். ஏய், பா..லூ...!
என்னோட அருமையான பூக்களை நாசம் செய்த உன்னை...
அவன் முதுகுத் தோலை உரிச்சுடறேன், நீ பேசாம இரு சொல்றேன்....
ஐயோ... அந்தப் பாழும் மெழுகு இத்தனை சுலபமாகவா வெயிலுக்கு உருகும்? அட கடவுளே

தெரியுமா?

382. 'கானகத்துக் கிழவன்' என்று ஒரு பிராணியை மலாயா வாசிகள் கூறுவார்கள். இந்தப் பிராணி எது?

383. ஜெர்மானியர்களின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு (சப்மரைன்) ஒரு பிரபலமான பெயர் உண்டு. அது என்ன?

384. செஞ்சிலுவையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நீலச் சிலுவை பற்றித் தெரியுமா?

385. சீனாவில் ஓடும் ஹூவாங்ஹோ நதிக்கு வேறொரு பெயர் உண்டு. அது என்ன?

386. கானடா தேசம் எந்த வருஷத்தில் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

387. ஹாங்காங் பிரிட்டனின் ஆதிக்கத்துக்குட்பட்டது எப்போது?

388. மொம்பாஸா எங்குள்ளது?

389. இங்கிலாந்தின் மிகப் பழைமையான சர்வகலாசாலை எது?

390. 'பியட்' பிரபலமான ஒரு கார். அந்தப் பெயரின் விளக்கம் தெரியுமா?

391. எலிஸபெத் ராணியின் முடிசூட்டு விழாவுக்கு முன்னால் ஒரு மகத்தான சாதனையை வெற்றிகரமாக நிறைவேற்றிய செய்தி இங்கிலாந்துக்குப் பெருமை அளித்தது. அது என்ன?

392. பதின்மூன்றும் நூற்றாண்டில் வெனிஸ் நகரைச் சேர்ந்த ஒருவர் கீழை நாடுகளுக்குப் பிரயாணம் செய்து குப்லேகானின் அவைக்கு வந்தார். அவர் பெயர் என்ன?

393. உலகின் மிகப் பெரிய கடல்கள் மூன்று எவை? வரிசைப்படி கூறு.

394. ஓர் அமெரிக்க ஜனாதிபதி பிரிட்டனின் ராணுவ அதிகாரியாக இருந்தவர். அவர் யார்?

395. 1890ம் ஆண்டுவரை ஜெர்மனியின் ஒரு பகுதி இங்கிலாந்தின் வசம் இருந்தது. அது எந்தப் பகுதி?

396. எழுத்தாளர்களில் பலர் புனைபெயரில் எழுதுவது உங்களுக்குத் தெரியும். ஒரு பிரபல ஆங்கில இலக்கியகர்த்தா 'பாஸ்' என்ற புனைபெயரில் எழுதினார். அவர் யார்?

397. ஜெருஸலத்தில் முதல் கோயிலைக் கட்டியது யார்?

தெரியுமே!

விடைகள்: 382. உராங் உடான் -- மனிதக் குரங்கு. 383. யூ போட்டுகள். 384. யுத்தத்தில் செயல்படும் குதிரை, நாய்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒரு சங்கம். இங்கிலாந்திலுள்ளது. இதற்கு நீலச் சிலுவைச் சங்கம் என்று பெயர். 385. மஞ்சள் ஆறு. 386. 1497ல் ஜான்காபாட்டினால் 387. 1842ல் 388. கென்யாவில். 389. ஆக்ஸ்போர்டு. 390. பியட் கார் தயாரிக்கும் கம்பெனியின் முதல் எழுத்துக்களால் உருவாக்கப்பட்டது. கம்பெனியின் பெயர் இதுதான்: Fabrica Italianna Automobile Torino. 391. ஜான் ஹன்டின் குழு எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய வெற்றிச் செய்தி 392. மார்கோ போலோ 393. பசிபிக், அட்லாண்டிக், இந்து மகாசமுத்திரம், 394. ஜார்ஜ் வாஷிங்டன் 395. ஹெலிகோலாண்ட் 396. சார்லஸ் டிக்கன்ஸ். 397. சாலமன்.



எஸ் பிரைவேட் லிமிடெட்
ஆசிரியர்: [illegible]

சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ○ ஆறு மாதம் ரூ. 3-50 ○ வெளிநாடுகள் ரூ. 18-00